பக்கங்கள் 16

# காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஆவணி 09 திங்கட்கிழமை 25.08.2025 | அதிர்வு 24

## ரணிலின் விடுதலைக்காக எதிர்க்கட்சிகள் ஓரணியில்

### கொழும்பில் விசேட ஊடக சந்திப்பு



முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் விடுதலைக்காக 03

## வைத்தியர்கள் இன்று பணிப் புறக்கணிப்பு!




நாடு முழுவதும் இன்று திங்கட்கிழமை காலை 8 மணி முதல் வைத்தியர்கள் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். 03

## ரணிலின் கைது திட்டமிட்ட அரசியல் பழிவாங்கல்தான்

### மனோ கடும் கொதிப்பு



”முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக நிகழ்த்தப்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் பழிவாங்கல் செயற்பாட்டைக் கூட்டு எதிரணியாக நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.” 03

# ரணிலை உடனே விடுதலை செய்க!

### எரிக் சொல்ஹெய்ம் வலியுறுத்து



“இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான குற்றச்சாட்டுகள் தகுதியற்றவை. தயவு செய்து அவரை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.”

- இவ்வாறு நோர்வேயின் இலங்கையின் சமாதானத்துக்கான முன்னாள் விசேட தூதுவரான எரிக் சொல்ஹெய்ம் கோரிக்கை விடுத்துள்ளார். 03

## செம்மணிப் புதைகுழி விவகாரம்: தமிழ்க் கட்சிகள் யாழில் இன்று முக்கிய சந்திப்பு



(எஸ்.நிதர்ஷன்)

செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் யாழ்ப்பாணத்தில் இன்று திங்கட்கிழமை ஒன்றுகூடிப் பேசவுள்ளன என்று தெரியவருகின்றது. 03

## ரணிலின் கைதுக்கு சந்திரிகாவும் எதிர்ப்பு



”முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை இந்த நாட்டின் ஜனநாயக மதிப்பின் மீது திட்டமிட்ட வகையில் மேற்கொண்ட தாக்குதலாகும். ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்குச் சகல அரசியல் தலைவர்களும் எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் .” 02

## சைக்கிளில் சென்றவரை மோதிய கென்ரர் வாகனம்

### குடும்பஸ்தர் பரிதாபச் சாவு





(கி.வசந்தன்)

வவுனியா, கனகராயன்குளம் – கொல்லர்புளியங்குளம் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் சைக்கிளில் பயணித்த ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தொடர்பாக மேலும் தெரியவருகையில், 03




முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் அடைக்கப்பட்டமைதான் இப்போது இலங்கை அரசியல் பரப்பில் முக்கிய பரபரப்பு செய்தி விவகாரம்.

ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படுவார், 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப் படுவார் என்றெல்லாம் அந்தக் கைதுக்கு சில தினங்களுக்கு முன்னரே அடித்துக் கூறிய யூடியூப் ஊடகவியலாளர் சுடத்த திலகசிறி விவகாரமும் முக்கிய அம்சமாகப் பேசப்படுகின்றது.

அந்த ஊடகவியலாளர் நேரத்துடனேயே வெளியிட்ட இந்தக் கருத்துத் தொடர்பில் விசாரணை நடத்தி நடவடிக்கை 02

# இராணுவ முகாமை அகற்ற வலியுறுத்தி பருத்தித்துறையில் இன்று போராட்டம்

பருத்தித்துறை நகரின் வளர்ச்சிக்கு தடையாக காணப்படும் இராணுவ முகாம்களை அகற்ற வலியுறுத்தி இன்று திங்கள் கிழமை பருத்தித்துறை துறைமுகத்தில் இருந்து கவனயீர்ப்பு போராட்டம் மற்றும் பேரணி முன்னெடுக்கப்பட உள்ளது.

இந்த போராட்டத்திற்கு ஆதரவாக பருத்தித்துறை மரக்கறி சந்தை வியாபாரிகள் இன்று வியாபார நடவடிக்கையினை நிறுத்துவதென தீர்மானித்துள்ளனர்.

பருத்தித்துறை நகர் பகுதி வர்த்தகர்களும் இன்று காலையில் கடைகளை மூடி ஆதரவு வழங்க உள்ளமை குதிப்பிடத்தக்கது.

# தெல்லிப்பளை விபத்தில் வயோதிபர் உயிரிழப்பு



தெல்லிப்பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இறால் மடம் பகுதியில இடம்பெற்ற விபத்தில் வயோதிபர் ஒருவர் ஸ்தலத்திலே உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் அளவெட்டி மேற்கு, அளவெட்டியைச் சேர்ந்த தியாகராசா சற்குணராசா (வயது 71) என்ற வயோதிபர் ஆவார்.

மேற்படி வயோதிபர் மருதனார் மடம் சந்தையில் வியாபாரம் செய்து வருவதாகவும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு தெல்லிப்பளை - அராலி வீதி ஊடாக சென்று கொண்டிருந்த போது இறால் மடம் பகுதியில் சகோதரி வீட்டுக்கு திரும்ப முற்பட்ட போது பின்புறமாக செலுத்தி வந்த பட்டாராக வாகனம் இவரை மோதியது.

இதில் அவர் ஸ்தலத்திலேயே மரணமானார். தப்பிச் சென்ற சாரதி தெல்லிப்பளை பொலிஸில் சரணடைந்துள்ளார்.

இந்த மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### இரகசியம் பரகசியம்...

எடுக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியினர் நேரடியாக குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு (சி.ஐ.டியினருக்கு) முறைப்பாடு செய்திருக்கிறார்கள். இந்த முறைப்பாட்டை அடுத்து அந்த விவரம் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது என்றும், அதனை அடுத்து மேற்படி ஊடகவியலாளரின் எதிர்வு கூறல் தொடர்பில் விசேட பொலிஸ் குழு ஒன்று விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது என்றும் செய்திகள் வெளியாகி உள்ளன.

ரணில் விக்கிரமசிங்கவின் இந்த விவகாரத்தை ஒட்டி பல தரப்புகளிடம் பொலிஸார் வாக்குமூலம் பெற்றுள்ள சூழ்நிலையில், அவற்றின் அடிப்படையில் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்படக்கூடிய சூழ்நிலை இருக்கின்றது என்பதை சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் இருந்து அறிந்து ஓர் ஊடகவியலாளர் அதை முற்கூட்டியே எதிர்வு கூறி செய்து வெளியிடுவது ஒன்றும் தப்பில்லை. ஒருவகையில் அப்படிச் செய்தியை - விடயங்களை - கண்டுபிடித்து, உறுதிப்படுத்தி செய்தியாக்குவது அந்த செய்தியாளரின் திறமைக்குரிய விடயம். அதைக் கடிந்து கொள்வதிலோ நோவதிலோ அர்த்தம் இல்லை.

அப்படி ரணில் கைது செய்யப்பட இருக்கின்றார் என்ற செய்தியை வெளியிடுவதும், அவருக்கு எதிராகச் சுமத்தப்படக்கூடிய குற்றச்சாட்டுக்கள் அவர் இலகுவில் பிணை பெற முடியாத இக்கட்டை உருவாக்கக்கூடிய விவகாரங்கள் என்று செய்தியாளர் தனது செய்தியில் குறிப்பிடுவதும் தவறல்ல.

ஆனால் கைதாகும் ரணில் விக்கிரமசிங்க நிச்சயமாக 14 நாள்கள் விளக்க மறியலில் வைக்கப்படுவார் என்று ஓர் ஊடகவியலாளர் முற்கூட்டியே அடித்துக் கூறுவது ஒரு வகையில் நீதிமன்ற நடவடிக்கையில் தலையிடுவதாக அல்லது நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கையாக விவரிக்கப்படக்கூடியது.

கைதாகும் ரணில் விக்கிரமசிங்க அவருக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளின் அடிப்படையில் நீதிமன்ற கைதிலிருந்து பிணை பெறுவது நெருக்கடியான சட்ட விவகாரம் என்று செய்தியாளர் குறிப்பிடுவதற்கும், நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்க 14 நாள்கள் வீட்டுக்காவலில் வைக்கப்படுவார் என்று அடித்துக் கூறுவதற்கு இடையில் வித்தியாசம் உண்டு.

நீதிமன்ற உத்தரவில் தலையிட்டு முற்கூட்டியே ஊகத்தை வெளியிடுவது நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டாக மாறி, சம்பந்தப்பட்ட செய்தியாளருக்கு சிக்கலை தரக்கூடியது என்பது மறுக்கப்படக் கூடியது அல்ல.

### ரணிலின் கைதுக்கு...

- இவ்வாறு முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை தொடர்பில் விசேட ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டு மேற்கண்டவாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

"நாட்டின் அடிப்படை ஜனநாயக நிறுவனங்களின் பலம் தொடர்பில் பாரியதொரு கவலை ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையால் ஏற்படும் எதிர்விளைவுகள் தனி நபரையோ அல்லது அரசியல் கட்சிகளுக்குச் செல்வாக்குச் செலுத்துவதைக் காட்டிலும் அதற்கு அப்பாற்பட்ட வகையில் ஒட்டுமொத்த சமூகக் கட்டமைப்பின் உரிமைகளுக்கும் அச்சுறுத்தலாக அமையும்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு சகல அரசியல் தலைவர்களும் எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும். ஜனநாயக விரோதச் செயற்பாடுகளுக்குப் பலமான எதிர்ப்பை வெளிப்படுத்துகின்றேன்." - என்றுள்ளது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## ரணிலை உடனே...

அவர் தனது எக்ஸ் தள பதிவிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

"இலங்கை, தெற்காசியா மற்றும் உலகெங்கிலும் உள்ள பல தலைவர்களுடன் நானும் இணைகின்றேன். தயவு செய்து முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்.

விளக்கமறியலின்போது ரணிலின் உடல் நிலை குறித்து நாம் அனைவரும் கவலைப்படுகின்றோம்.

2022ஆம் ஆண்டில் நாடு பொருளாதார - அரசியல் குழப்பம் அடைந்த போது இலங்கையைக் காப்பாற்ற எழுந்து நின்ற தலைவர் ரணில் விக்கிரமசிங்க. ரணிலுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தகுதியற்றவை. அவை உண்மையாக இருந்தாலும் ஐரோப்பாவில் அவற்றைக் குற்றமாகவோ அல்லது

ஏற்றுக்கொள்ள முடியாத நடத்தையையும் கொண்டிருக்காது.

ஊழலுக்கு எதிரான இலங்கை அரசின் பிரசாரத்துக்கு நான் முழு ஆதரவை வழங்குகின்றேன். ஆனால், தயவு செய்து உண்மையான பிரச்சினைகளில் கவனம் செலுத்துங்கள்." - என்றுள்ளது.

## சைக்கிளில்...

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா நோக்கி வந்து கொண்டிருந்த கென்ரர் ரக வாகனம் கொல்லர்புளியங்குளம் பகுதியில் சென்று கொண்டிருந்த போது எதிரே சைக்கிளில் பயணித்த நபருடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இந்த விபத்தில் சைக்கிளில் பயணித்த நபர் படுகாயமடைந்த நிலையில் மாங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். எனினும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்

சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த முத்து இராமலிங்கம் (வயது 61) என்ற குடும்பஸ்தரே சாவடைந்தார்.

விபத்து தொடர்பாக கனகராயன் குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## ரணிலின் கைது...

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக பட்டலந்த வதை முகாம் குற்றச்சாட்டு, மத்திய வங்கி பிணை முறி மோசடி குற்றச்சாட்டு என்பவற்றை மக்கள் முன்வைத்து, இவற்றுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் எனக் கூறித்தான் தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. அதைச் செய்யுங்கள். அதைச் செய்வீர்களானால் எதிர்க்கட்சிகள் கூட்டாக ஊடக சந்திப்பை நடத்த வேண்டி வந்திருக்காது.

ஆனால்,தற்போதுஜனநாயகம்குறித்து கேள்வி எழுந்துள்ளது. பணத்தை மீளக் கோரி ரணிலுக்குக் கடிதம் அனுப்பி இருக்கலாம். அவர் மீளச் செலுத்தி இருக்காவிட்டால் நடவடிக்கை எடுத்திருக்கலாம். எனவே, இது திட்டமிட்ட அரசியல் பழிவாங்கல் நடவடிக்கையாகும்." - என்றார்.

## ரணிலின் விடுதலைக்காக...

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து செயற்படும் என்று முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவித்தார்.

கொழும்பில் எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஓரணியில் செயற்படுவோம் என்றும் அவர் அறைகூவல் விடுத்தார்.

முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவர் பழனி திகாம்பரம், ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவர் பாட்டலி சம்பிக்க, ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோரள, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான காவிந்த ஜயவர்தன, தயாசிறி ஜயசேகர, ஐக்கிய தேசியக் கட்சியின் எம்.பியான ரவி கருணாநாயக்க, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரும், முன்னாள் அமைச்சர்களான சுசில் பிரேமஜயந்த, ஜீ.எல். பீரிஸ், துமிந்த திஸாநாயக்க, நிமால் சிறிபால டி சில்வா, டிரான் அலஸ், மகிந்த அமரவீர, பவித்ரா வன்னியா ராச்சி, அகில விராஜ் காரியவசம் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

இதேநேரம், எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து நேற்று கூட்டிய சந்திப்பில் எதிர்க்கட்சி தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ பங்கேற்கவில்லை. எனினும், அவர் ரணில் விக்கிரமசிங்க சிகிச்சை பெறும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பணிக்கு நேரில் என்று அவரின் உடல் நிலை குறித்துவிசாரித்தார்.

இதேபோன்று, இந்த ஊடக சந்திப்பில் கலந்துகொள்வதாக உறுதியளித்த முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரும் பங்கேற்கவில்லை. எனினும், சந்திரிகா குமாரதுங்க செய்திக் குறிப்பு ஒன்றை அனுப்பியிருந்தார். அதனை தலதா அத்துகோரள வாசித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



## தமிழ்க் கட்சிகள்...

ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடர் நடைபெறவுள்ள நிலையில் செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் தமிழ்க் கட்சிகள் கூட்டாகவும், அதேநேரம் தனித்தனியாகவும் பல்வேறு சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளதுடன் பல்வேறு தீர்மானங்களையும் எடுத்திருக்கின்றன.

இவ்வாறான நிலையில் யாழ். நகரிலுள்ள ஹோட்டல் ஒன்றில் இன்று காலை தமிழ்க் கட்சிகள் பலவும் மீண்டும் ஒன்றுகூடவுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஏற்பாட்டில் அந்தக் கூட்டணியில் உள்ள கட்சிகளின் இணைத் தலைவர்களும் அதேபோன்று ஏனைய சில கட்சிகளின் தலைவர்களும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர் என்று தெரியவருகின்றது.

இந்தச் சந்திப்பின் முடிவில் தமிழ்க் கட்சிகள் இணைந்து இன்று மதியம் விசேட ஊடக சந்திப்பொன்றையும் நடத்தவுள்ளன.

## வைத்தியர்கள் இன்று...

வைத்தியர்களின் இடமாற்ற செயல்முறை தொடர்பான பிரச்சினைகள் உட்படப் பல கோரிக்கைகளை முன்வைத்து இந்தப் பணிப்புறக்கணிப்புக்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## இதுவா நீதி முறைமை?

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டு, விளக்க மறியலில் வைக்கப்பட்டிருக்கும் நிலையில், அதையொட்டி ஆளுதரப்பு வெளியிடும் முழக்கங்கள் தாங்க முடியாத கட்டத்தை அடைந்திருக்கின்றன.

ஜனாதிபதி என்றாலும், சாதாரண பொது மகன் என்றாலும் சட்டத்தின் முன் எல்லோரும் சமம். எல்லோருக்கும் ஒரே ஒரு மாதிரியாக நீதி பரிபாலிக்கப்படும். குற்றம் இழைத்தவர்கள் தப்ப முடியாது. தண்டிக்கப்படுவார்கள். முறைகேடோ, ஊழலோ, லஞ்சமோ, நிதி மோசடியோ எந்தக் குற்றத்தை இழைத்தவர்களும் வேறுபாடு இன்றி, நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவார்கள் - என்றெல்லாம் ஆளும் தரப்பின் ஒவ்வொரு தலைவரும் முழங்குகிறார்கள்.

அதுவும் ஆளும் தரப்பில் தமிழர்களின் பிரதிநிதிகளாகத் தங்களை காட்டிக் கொள்ளும் அமைச்சர் சந்திரசேகரனில் இருந்து ஏனைய பிரகிருதிகள் வரைச் செய்யும் முழக்கமும் தாங்க முடியாமல் இருக்கின்றது.

ஒரு கோடி 66 லட்சம் ரூபா அரச சொத்தை தனிப்பட்ட விமான பயணத்திற்கும் பிரிட்டன் விஜயத்துக்கும் பயன்படுத்தினார் என்ற மோசடி குற்றச்சாட்டில் நாட்டின் முன்னாள் ஜனாதிபதி கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

குற்றம் இழைத்தவர்கள் தப்ப முடியாது என்ற ஆளுந்தரப்பின் வியாக்கியானம் யுத்த குற்றங்கள், போரின் போது தமிழர்களுக்கு எதிராக இழைக்கபட்ட இனவழிப்புக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்றவை தொடர்பான விடயத்தில் மாத்திரம் வேறுபட்டு - தலைகீழாக - நிற்கின்றது.

ஊழல், மோசடி, முறைகேடு, லஞ்சம் போன்ற குற்றங்கள் என்றால் கலைத்துப் பிடித்து விசாரிப்போம். ஆனால் பல்லாயிரக்கணக்கில் மக்களை - சிறுபான்மை மக்களை - கொன்றொழித்த பெரும் கொடூரம் என்றால் சட்டம் கண்ணை மூடிக் கொண்டு இருக்கும். இதுதான் அமைச்சர் சந்திரசேகரனில் இருந்து கேவலம் தமிழர் தரப்பின் பிரதிநிதிகளாக தங்களை காட்டிக் கொண்டு நீதி முழங்கும் வித்துவான்கள் வரையானோரின் பேச்சாக இருக்கின்றது.

குற்றம் இழைத்தவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்று தத்துவம் பேசும்போது, தமிழர்களுக்கு எதிராக யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், அடிப்படை உரிமை மீறல்கள் போன்ற பெரும் குற்றம் இழைத்தவர்களை மாத்திரம் கழித்து, ஒதுக்கி, விலத்தி வைத்து விட்டு, இந்த பிரகிருதிகள் நீதி உரைப்பதும், தத்துவம் பேசுவதும் எந்த வகையில் நியாயம்?

நீதியை நிலைநாட்டுவோம் என்ற முழக்கம் நீதியோடு முன்னெடுக்கப்பட வேண்டும். பல்லாயிரக் கணக்கில் மக்களை கொன்றொழித்த குற்றங்களுக்கு நீதி செய்ய மாட்டோம் என்று அடம் பிடித்துக்கொண்டு, மறுபுறத்தில் தாங்கள் நீதியை நிலைநாட்டுகின்ற பிரதிநிதிகளாகக் காட்டுவது எத்தனை தூரம் முட்டாள்தனமானது?

அதுவும் பாதிக்கப்பட்ட தமிழர்களில் தாங்களும் ஒருவராக இருந்து கொண்டு, அந்தத் தமிழர்களுக்கு நீதி செய்யப்பட மாட்டாது என்பதை தென் இலங்கைச் சிங்களம் உறுதியாக காட்டிக்கொண்டிருக்கையில், அந்த சிங்களத்தோடு தொங்கிக் கொண்டு இங்கு வந்து தமிழ் பிரதிநிதிகள் அந்த சிங்களத்தின் நீதியை நிலைநாட்டிப் பெருமை பேசுவது - தமிழர்களாகிய நம்மத்தியில் கதை அளப்பது - எத்துணை தூரம் முட்டாள்தனமானது...! தமிழ் மக்களை அறிவற்றவர்கள் என்ற சிந்தனையில் உரைக்கும் நீதி தத்துவங்கள் இவை.



# செம்மணி மனிதப் புதைகுழியில் இன்று முதல் மூன்றாம் கட்ட அகழ்வு நடவடிக்கை ஆரம்பம்

**(ந.லோகதயாளன்)**

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாள்கள் அனுமதி வழங்கிய நிலையில், கடந்த 06ஆம் திகதி வரையில் 32 நாள்கள் முன்னெடுக்ககப்பட்ட பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டன.

இதன் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் இன்றைய தினம் திங்கட்கிழமை முன்னெடுக்கப்படவுள்ளன.

அதேவேளை கடந்த 06ஆம் திகதி வரையில் மொத்தமாக 41 நாள்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின் போது, 133 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன. மொத்தம் 147 எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் கடந்த 14ஆம் திகதி யாழ் நீதவான் நீதிமன்றில் செம்மணி புதைகுழி வழக்கு விசாரணைகளின் போது, தற்போது அகழ்வு நடைபெறும் பகுதிகளைச் சூழவுள்ள பகுதிகளிலும் புதைகுழிகள் இருக்கலாம் என வலுவான சந்தேகம் உள்ளமையால் மேலும் 08 வார கால பகுதி தேவைப்படுவதாக சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவனால் மன்றில் கோரிக்கை முன்வைக்கப்பட்டதை அடுத்து, அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ள மன்று கட்டளையிட்டு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# லசந்த கொலைவிசாரணை மீண்டும் ஆரம்பித்துள்ளது



ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்கவின் கொலையுடன் தொடர்புடைய விசாரணைளை குற்றப்புலனாய்வு திணைக்களம் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

இதுவரை முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கு மேலதிகமாக புதிய விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 9ஆம் திகதி இரத்மலானையில் சண்டே லீடர் பத்திரிகையின் முன்னாள் ஆசிரியர் லசந்த விக்ரமதுங்க கொலை செய்யப்பட்டார்.

தமது காரில், அலுவலகம் நோக்கி பயணித்த போது அவர் கொலை செய்யப்பட்டார்.

இதேவேளை, ஊடகவிலாளர் கீத் நொயர் கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணை அறிக்கைகளை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் சட்ட மாஅதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

# ரணிலை முன்னரேயே கைது செய்திருக்க வேண்டுமாம்; சட்டம் சகலருக்கும் சமம் என்கின்றார் பிமல் ரத்நாயக்க!

## வவுனியாவில் நேற்று அவர் கருத்து




(கி.வசந்தன்)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜூலைக் கலவரம், யாழ் நூலக எரிப்பு, பட்டலத்தை வதைமுகாம் போன்ற சம்பவங்கள் இடம்பெற்ற காலப் பகுதியிலேயே கைது செய்திருக்க வேண்டும். சட்டம் அனைவருக்கும் சமமானது என நெடுஞ்சாலைகள் மற்றும், கப்பல் போக்குவரத்துத் துறை அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் பின் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

ரணில் விக்கிரமசிங்கவின் கைது நடவடிக்கையானது ஒரு அரசாங்கப் பழிவாங்கல் அல்ல. நாட்டு மக்கள் எமக்கு வழங்கிய ஆணைக்கு அமைய நாங்கள் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்ற அடிப்படையிலேயே அது இடம்பெற்றது.

இதுவரை காலமும் இந்த நாட்டில் சாதாரண மக்களுக்கு மாத்திரமே சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. ஆனால் எமது ஆட்சியில் யார், எவர் என்ற தராதரம் பாராது, அனைவருக்கும் சமமான வகையில் சட்டம் அமுல்படுத்தப்படுகின்றது.

தற்போது இதற்கு எதிர்ப்பினை தெரிவிக்கும் வகையில் குப்பைகள் அனைத்தும் ஒன்று சேர்ந்துள்ளன. ஆனால் அவர்களால் அரசாங்கத்தை ஒன்றும் செய்ய முடியாது. தேர்தலில் நின்று வெற்றி பெறமுடியாதவர்கள், மக்களால் தோற்கடிக்கப்பட்டவர்களே ஒன்று சேர்ந்துள்ளனர். மைத்திரி, நிமால் சிறிபாலடி சில்வா, மனோகணேசன் இவர்கள் எல்லாம் நிராகரிக்கப்பட்டவர்கள். இவர்கள் ஒன்று சேர்ந்து குத்துவதால் எதுவும் நடந்து விடாது.

ரணிலின் காலத்திலேயே யாழ் நூலகம் எரியூட்டப்பட்டது, கறுப்பு ஜூலைஜ் கலவரம் இடம்பெற்றது. அந்தக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வவுனியா, செட்டிகுளம், வாரிக்குட்டியூர் பகுதிகளிற்கு இடம்பெயர்ந்திருந்தார்கள். அத்துடன் பட்டலந்தை அறிக்கை தொடர்பாக அனைவருக்கும் தெரியும். அதற்கும் ரணில் விக்கிரமசிங்க பதில் சொல்ல வேண்டும்.

எனவே அந்த காலப்பகுதியில் தான் இவரை கைது செய்திருக்க வேண்டும். இது சின்ன விடயம் தான். ஆனால் எதிர் காலத்தில் மத்திய வங்கியில் இடம்பெற்ற பிணை முறி ஊழல் தொடர்பாக மீண்டும் விசாரணைகள் முன்னெடுக்கப்படும்.

அத்துடன் ஊழல்வாதிகள், அரச பணத்தை மோசடி செய்தவர்கள் மீது தொடர்ச்சியாக சட்டம் பாயும். பொலிஸார் சுதந்திரமான வகையில் தங்களது கடமைகளை செய்வதற்கான சூழல் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. நாங்கள் அரசாங்கம் என்ற வகையில் பொலிஸாருக்கு எந்தவிதமான அழுத்தங்களையும் வழங்கவில்லை. – என்றார்.

# ஜனாதிபதிக்கும் மக்களுக்கும் இலங்கையில் நீதி ஒன்றுதான்

## ஜெகதீஸ்வரன் எம்.பி. விளக்கம்

(கி.வசந்தன்)

ஜனாதிபதிக்கும் சாதாரண மக்களுக்கும் இலங்கையில் நீதி ஒன்றுதான் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில் –

ஊழல், மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுப்போம் என்று தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலேயே கூறப்பட்டிருந்தது.

அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர் செய்த ஊழலுக்காக கைது செய்யப்பட்டுள்ளாரே தவிர, அதில் எந்தவிதமான அரசியல் பின்னணிகளும் பழிவாங்கல்களும் அதில் கிடையாது.

நீதியான முறையில் விசாரணைகள் இடம்பெற்று சாட்சியங்களின் அடிப்படையில் அவர் கைது செய்யப்பட்டுள்ளார். ஜனாதிபதிக்கும் சாதாரண மக்களுக்கும் இலங்கையில் நீதி ஒன்று தான் என்பதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

இந்த கைதானது நாட்டு மக்களுக்கு ஒரு செய்தியை




கூறி நிக்கின்றது. தேசிய மக்கள் சக்தி அரசில் யார் ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்றார்களோ, ஈடுபட்டார்களோ அவர்கள் எந்தவித தராதரமும் பார்க்கப்படாமல் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள் என்பதற்கு இந்த கைதினை உதாரணமாகக் கொள்ளலாம். – என்றார்.





## உள்நாட்டுப் பொறிமுறையை நிராகரித்து

# சர்வதேச சுயாதீன விசாரணையை வலியுறுத்தி வடக்கு - கிழக்கில் 30 ஆம் திகதி கவனவீர்ப்பு

(வாலகிருஸ்ணா)

தமிழினவழிப்புக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்படுதலுக்கும், போர்க் குற்றங்கள் மற்றும் மனிதப்புதைகுழிகள் குறித்து சர்வதேச சுயாதீன விசாரணையை நாங்கள் கோருகிறோம் என்பதை வலியுறுத்தி எதிர்வரும் 30ஆம் திகதி வடகிழக்கில் முன்னெடுக்கப்படும் போராட்டத்திற்கு அனைத்து தமிழ் தேசிய சக்திகளையும் ஆதரவு வழங்குமாறு கிழக்கு மாகாண வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எதிர்வரும் 30ஆம் திகதி மட்டக்களப்பில் கிழக்கு மாகாண வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கங்கள் இணைந்து பழைய கல்லடி பாலத்திலிருந்து முன்னெடுக்கவுள்ள சர்வதேச நீதிகோரிய கவன ஈர்ப்புப் பேரணி தொடர்பில் ஆராயும் விசேட கூட்டம் நேற்று முன்தினம் மாலை மட்டக்களப்பு அமெரிக்க மிஷன் மண்டபத்தில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் தலைவி திருமதி அ.அமலநாயகி தலைமையில் நடைபெற்ற இந்த கலந்துரையாடலில் அம்பாறை, திருகோணமலை மாவட்டங்களின் வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் சங்கங்களின் தலைவிகள், உறுப்பினர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், ஊடகவியலாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

உள்நாட்டுநீதிபொறிமுறையில்17வருடமாக நம்பிக்கையிழந்து தொடர்ச்சியாக சர்வதேச நீதிப்பொறிமுறையைக் கோரிவரும் நிலையில் எதிர்வரும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் அமர்வின் போது தமது கோரிக்கைக்கு வலுசேர்க்கும் வகையிலான தீர்மானத்தினைக்கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

மட்டக்களப்பு பழைய கல்லடி பாலத்திலிருந்து சர்வதேச நீதிகோரிய பேரணி ஆரம்பமாகி புதிய கல்லடி பாலத்தின் ஊடாக காந்திபூங்காவில் உள்ள படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர் நினைவுத்தூபி வரையில் பேரணி நடைபெறவுள்ளது.

அங்கு கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றும் நடாத்தப்படவுள்ளதுடன் சர்வதேச நீதிகோரி ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அனுப்புவதற்கான அறிக்கை வாசிக்கப்பட்டு வழங்கப்படவுள்ளதாக இங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த போராட்டம் வெறுமனே வலிந்து காணாமலாக்கப்பட்ட உறவுகளின் போராட்டமாக கருதாமல் ஒட்டுமொத்த தமிழ் மக்களின் போராட்டமாக நடாத்துவதற்கு அனைவரையும் ஒன்றிணைந்து ஆதரவு வழங்குமாறு இங்கு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.










# சர்வதேச நீதி கோரி கையெழுத்துப் போராட்டம் இரண்டாவது நாளாக நேற்று நாவிதன்வெளியில்



(பாறுக் ஷிஹான்)

தமிழ் இன அழிப்பிற்கான சர்வதேச நீதியைக் கோரும் மக்கள் கையெழுத்துப் போராட்டம் இரண்டாவது நாளாகவும் நேற்றுத் தொடர்ந்தது.

சர்வதேச நீதி கோரும் போராட்டமான நீதியின் ஓலம் (VOICE OF JUSTICE) எனும் தொனிப்பொருளுடனான பொதுமக்கள் கையெழுத்து சேகரிக்கும் போராட்டம் நேற்று முன் தினம் வடக்கு – கிழக்கு தமிழர் தாயகம் எங்கும் எட்டு மாவட்டங்களிலும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அந்த வகையில் அம்பாறை மாவட்டத்தின் கல்முனை மாநகர மத்தியில் ஸ்ரீ அம்பலத்தடி பிள்ளையார் ஆலயம் முன்பாக இக்கையெழுத்து சேகரிக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

இரண்டாவது நாளாக மக்கள் கையெழுத்துப் போராட்டம் நேற்று நாவிதன்வெளி பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்டது .

இக்கையெழுத்து சேகரிக்கும் பணியில் பலர் ஆர்வத்துடன் வந்து தமது ஆதரவுகளையும் வழங்கித் தமது கையொப்பங்களையும் இட்டதுடன் அங்கு கலந்து கொண்ட இந்துசமய குரு தனது கருத்துகளையும் ஊடகங்களுடன் பகிர்ந்து கொண்டார்.

நேற்றைய நிகழ்வில் அதனை ஒருங்கமைத்திருந்த மனித உரிமை செயற்பாட்டாளர் தாமோதரம் பிரதீபன் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாஎர் காந்தன் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தமையோடு பொதுமக்கள்,இளைஞர்களிடமும் இக்கையெழுத்துப் போராட்டத்தின் நோக்கம் பற்றியும் தமது மக்கள் எதிர்நோக்கிய இன்னல்கள்,பாதிப்புகள் பற்றியும் அதற்காக தாம் கோரும் சர்வதேச நீதி தொடர்பிலும் கருத்துகளைப் பகிர்ந்தனர்.

# தமிழக மீனவரின் 14 படகுகளின் உரிமையாளர்கள் இன்று தனிப் படகில் யாழ்ப்பாணம் வருகின்றனர்

(ந.லோகதயாளன்)

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டியபோது பிடிக்கப்பட்டு நீதிமன்றங்களினால் விடுவிக்கப்பட்ட தமிழக மீனவர்களின் 14 படகுகளின் உரிமையாளர்கள் தங்கள் படகுகளைப் பார்வையிட கடல் வழியாக இன்று யாழ்ப்பாணம் வருகை தருகின்றனர்.

இலங்கை கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய குற்றத்தில் நூற்றிற்கும் மேற்பட்ட படகுகள் கடற்படையினரால் பிடிக்கப்பட்டு 89 படகுகள் அரச உடைமையாக்கப்பட்டுள்ளன. இவற்றில் 14 படகுகளை விடுவிக்க நீதிமன்றங்கள் உத்தரவிட்டுள்ளன. எஞ்சிய படகுகளின் வழக்குகள் நிலுவையில் உள்ளது.

நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்ட படகு உரிமையாளர்கள் 14 பேரும் இன்றைய தினம் தனியான படகில் யாழ்ப்பாணம் வருகை தந்து தமது படகுகளை பார்வையிடவுள்ளனர்.

இராமேஸ்வரம் பகுதியில் இருந்து வருகை தரும் விசைப்படகு உரிமையாளர்கள் தங்கள் படகுகள் திருத்தம் செய்யும் நிலையில் உள்ளனவா அல்லது கட்டி இழுத்துச் செல்ல முடியுமா என்பது தொடர்பில் பரிசீலிக்கவுள்ளனர்.

யாழ்ப்பாணம் வருகை தரும் தமிழக மீனவர்கள் இன்றும் நாளையும் தங்கியிருந்து படகுகளைப் பரிசீலித்து நாளை மீண்டும் இராமேஸ்வரம் திரும்பி நீதிமன்றங்களால் விடுவிக்கப்பட்ட 14 படகுகளில் நல்ல நிலையில் உள்ள படகுகளை தமிழகம் எடுத்துச் செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.




# இனவழிப்புக்கு சர்வதேச பொறிமுறையில் விசாரணை
# கரைச்சி, பூநகரி, பளை பிரதேச சபைகளில் தீர்மானம்

இலங்கையில் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு உள்நாட்டு விசாரணை நீதியை பெற்றுத்தராது, எனவே சர்வதேச விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்க வேண்டும் என ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பங்காளிகட்சியான சமத்துவக் கட்சியின் பிரதேசசபை உறுப்பினர்களால் கொண்டு வரப்பட்ட பிரேரணை கரைச்சி, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச சபைகளில் ஏகமனதாகத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இந்தப் பிரேரணைகளில் குறிப்பிடப்பட்டுள்ளவை வருமாறு:–

இலங்கையில் சிறுபான்மைத் தமிழ் இனம் மீது இலங்கைப்சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு மாறி மாறி ஆட்சிக்கு வந்த அரசுகள் 2009 வரை மேற்கொண்டது ஒரு இனவழிப்பு நடவடிக்கையே. அதன் உச்சக்கட்டமாக 2009 இறுதி யுத்தகாலத்தில் மிகக் கொடூரமான இனவழிப்பு யுத்தத்தில் பல ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டார்கள். அத்தோடு ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் காணாமல் ஆக்கப்பட்டுள்ளார்கள். தமிழ் மக்களின் பூர்வீகப் பிரதேசங்களான வடக்க. – கிழக்கில் பல இடங்களில் பாரிய மனித புதைகுழிகள் காணப்படுகின்றன. அதன் ஒரு பெரும் சாட்சியாக செம்மணி மனிதப் புதைக்குழி உள்ளது.

எனவேதான் தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு உள்நாட்டு விசாரணைகள் நீதியை பெற்று தரா. ஆகவே சர்வதேச சமூகம் – குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பேரவை – ஒரு சர்வதேச விசாரணைப் பொறிமுறையை உருவாக்கி, தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைக்கு நீதியைப் பெற்றுத்தர வேண்டும். – எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பிரேரணை மேற்படி மூன்று பிரதேச சபைகளிலும் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது.



# ககன்யானுக்கான முதலாவது ஏர் டிராப் சோதனை வெற்றி



இஸ்ரோவின் முதல் விண்வெளி பயணமான ககன்யானில் செல்ல உள்ள விண்வெளி வீரர்கள் பாதுகாப்பாக தரையிறங்குவதை உறுதிப்படுத்தும் முதல் ஒருங்கிணைந்த ஏர் டிராப் சோதனை வெற்றிகரமாக நடத்தப்பட்டுள்ளது.

இது தொடர்பாக இஸ்ரோ வெளியிட்டுள்ள பதிவில்,

“ககன்யான் பயணத்தின் தொடக்கம் முதல் முடிவு வரையிலான முழுமையான ஒருங்கிணைந்த ஏர் டிராப் சோதனை வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டுள்ளது.

இஸ்ரோ, இந்திய விமானப்படை, டிஆர்டிஓ, இந்திய கடற்படை, இந்திய கடலோர காவல்படை ஆகியவற்றின் கூட்டு முயற்சியின் கீழ் இந்த சோதனை மேற்கொள்ளப்பட்டது.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்வெளிப் பயணத்தில் மேலே புறப்படுவது முதல் பத்திரமாக கீழே தரையிறங்குவது வரை அனைத்துமே விண்வெளி வீரர்களுக்கு மிகவும் ஆபத்தானதாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

கீழே இறங்கும்போது, உரிய நேரத்தில் பாராசூட் விரிவடைந்து விண்வெளி வீரர்களை அது பத்திரமாக தரையிறக்க வேண்டும். இதை உறுதிப்படுத்தும் நோக்கில் 5 தொன் எடையுள்ள போலி குழுக்கள் மேலே அனுப்பப்பட்டு பிறகு பாராசூட் மூலம் பத்திரமாக கீழே இறக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த முயற்சி வெற்றி பெற்றிருப்பது, ககன்யான் திட்டத்தில் மிக முக்கிய மைல்கலாகப் பார்க்கப்படுகிறது.

இதனிடையே, ககன்யானில் பங்கேற்கவுள்ள குரூப் கேப்டன் சுபன் ஷ்சுக்லா, குரூப் கேப்டன் பி.பி. நாயர், குரூப் கேப்டன் அஜித் கிருஷ்ணன், குரூப் கேப்டன் அங்கத் பிரதாப் ஆகியோரை பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டி கௌரவித்தார்.

இந்த நிகழ்வில் பேசிய ராஜ்நாத் சிங், “நான்கு ககன்யான் விண்வெளி வீரர்களும் நாட்டின் ரத்தினங்கள், தேசிய லட்சியங்களின் முன்னோடிகள்.

இந்தியா விண்வெளியை ஆராய்ச்சிக்கான ஒரு துறையாக மட்டும் பார்க்கவில்லை. நாளைய பொருளாதாரம், பாதுகாப்பு, எரிசக்தி, ஒட்டுமொத்த மனிதகுலத்தின் எதிர்காலம் என அனைத்துமாக அதை இந்தியா பார்க்கிறது. பூமியின் மேற்பரப்பைத் தாண்டி விண்வெளியின் புதிய எல்லைகளுக்குள் நாம் சீராக முன்னேறி வருகிறோம்.

சந்திரனில் இருந்து செவ்வாய் வரை நமது இருப்பையும் ஆய்வுகளையும் நாம் ஏற்கெனவே விரிவுபடுத்தியுள்ளோம். இப்போது ககன்யான் போன்ற திட்டங்களுக்கு நாடு முழுமையாக தயாராக உள்ளது.

இந்த சாதனை வெறும் தொழில்நுட்ப மைல்கல் மட்டுமல்ல. தற்சார்பு பாரதத்தில் இது ஒரு புதிய அத்தியாயம். உலகின் முன்னணி விண்வெளி சக்திகளில் ஒன்றாக இந்தியா பெருமையுடன் உயர்ந்து நிற்கிறது. இந்தியாவின் விண்வெளித் திட்டம் ஆய்வகங்கள், ஏவுதள வாகனங்களுடன் மட்டும் நின்றுவிடவில்லை. இது நமது தேசிய விருப்பங்கள், உலகளாவிய பார்வை ஆகியவற்றின் பிரதிபலிப்பாகும்.

சந்திரயான் முதல் மங்கள்யான் வரை, மன உறுதியால் மிகவும் சவாலான இலக்குகளை குறிப்பிடத்தக்க சாதனைகளாக மாற்ற முடியும் என்பதை இந்தியா நிரூபித்துள்ளது.

குரூப் கேப்டன் சுபன்ஷ்சுக்லாவின் வெற்றிகரமான விண்வெளிப் பயணம் அசாதாரண சாதனை. இது வெறும் தொழில்நுட்ப சாதனை மட்டுமல்ல, நம்பிக்கை மற்றும் அர்ப்பணிப்பின் செய்தி.” என்று தெரிவித்துள்ளார்.




# இராமநாதபுரத்தில் 20 இடங்களில் எண்ணெய்க் கிணறுகளுக்கு அனுமதி

இராமநாதபுரம் மாவட்டத்தில், 20 இடங்களில் ஹைட்ரோகார்பன் சோதனை கிணறுகளை அமைக்க மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது.

இது குறித்த தகவல் இந்திய எரி வாயு மற்றும் எண்ணெய் கழகம் (ஓ.என்.ஜி.சி.) இணைய தளத்தில் வெளியாகியுள்ளது.

மத்திய அரசின் புதிய எண்ணெய் எடுப்பு கொள்கை அடிப்படையில், ஓ.என்.ஜி.சி. நிறுவனம் இராமநாதபுரம் மற்றும் சிவகங்கை மாவட்ட பகுதிகளை உள்ளடக்கி 1403.41 சதுர கிலோ மீற்றர் பகுதியில் ஹைட்ரோகார்பன் எடுக்க அனுமதி பெற்றிருந்தது.

அதன்படி, எண்ணெய் மற்றும் எரி வாயு எடுக்கும் பணியின் முதல் கட்டமாக, இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தனிச்சியம், பேய்குளம், கீழசெல்வனூர், கே.வேப்பங்குளம், பூக்குளம், சடயநேரி, கீழச்சிறுபோது, வல்லக்குளம், பனையடிஏந்தல், காடம்பாடி, நல்லிருக்கை, அரியக்குடி, காவனூர், காமன்கோட்டை, சிறுவயல், ஆழமலந்தல், சீனங்குடி அழகர்தேவன் கோட்டை, அடந்தனார் கோட்டை, ஏ.மணக்குடி உள்ளிட்ட பகுதிகளில் 20 சோதனை ஹைட்ரோ கார்பன் கிணறுகளை 675 கோடி ரூபா செலவு செய்து தோண்ட திட்டமிட்டது.

இந்த கிணறுகளை தோண்ட அனுமதி கோரி சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திடம் ஓ.என்.ஜி.சி. நிறுவனம் கடந்த 2023 ஒக்டோபரில் விண்ணப்பித்திருந்தது.

மனுவை ஆய்வு செய்த மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையம், 20 இடங்களில் சோதனை கிணறு அமைக்க ஓ.என்.ஜி.சி. நிறுவனத்துக்கு அனுமதி வழங்கியுள்ளது.

# காவிரி ஆறு வழியெங்கும் தடுப்பணைகள் கட்டப்படும்

## விவசாயிகளிடம் பழனிசாமி உறுதி

‘மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்’ சுற்றுப்பயணத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் பழனிசாமி நேற்று மண்ணச்சநல்லூர் தொகுதிக்குச் செல்லும் வழியில் திருச்சி – சென்னை தேசிய நெடுஞ்சாலையில் காவிரி பாலத்தில் விவசாயிகள் அவரை வரவேற்கக் காத்திருந்தனர்.

விவசாயிகளைக் கண்டதும் பஸ்ஸை நிறுத்தச்சொல்லி கீழே இறங்கிய பழனிசாமி, விவசாயிகள் ஒரு தட்டில் வைத்து வழங்கிய நெல் மணிகள் மற்றும் பூக்களை காவிரி ஆற்றில் தூவி காவிரியை வணங்கினார்.

இதன்போது விவசாயிகளிடம் பேசிய பழனிசாமி,

“ஏற்கனவே ஆதனூர், குமாரமங்கலம் உள்ளிட்ட இரண்டு இடங்களில் அ.தி.மு.க ஆட்சியில் தடுப்பணை கட்டியிருக்கிறோம். மேலும் நான்கு தடுப்பணைகள் கட்டுவதற்கு விரிவான



திட்ட அறிக்கை தயார் செய்து, அதற்கான முதற்கட்டப் பணிகள் துவங்கிய நேரத்தில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அடுத்து வந்த தி.மு.க. அரசு திட்டத்தை கைவிட்டு விட்டது. மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததும் மேட்டூர் அணையில் இருந்து காவிரி கடலில் கலக்கும் வரை எங்கெல்லாம் தடுப்பணைகள் அமைக்க முடியும் என்பதை ஆராய்ந்து அதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

ஏனெனில், தடுப்பணை கட்டும்போது அந்த இடத்தைச் சுற்றிய நிலங்களும், மக்களும் பாதிக்கப்படக் கூடாது. அதுபோன்ற இடங்களை ஆய்வு செய்தே அமைக்க முடியும். அதனால் முழுமையாக ஆராய்ந்து தடுப்பணை அமைத்துக் கொடுக்கிறேன்.” என்று தெரிவித்துள்ளார்.



# ரஷ்ய அணுமின் நிலையத்தை குறிவைத்து உக்ரைன் ஆளில்லா விமானத் தாக்குதல்

மேற்கு ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியைச் சேர்ந்த அணுமின் நிலையத்தைக் குறிவைத்து உக்ரைனிய ஆளில்லா விமானம் ஒன்று மேற்கொண்ட தாக்குதலில் தீப்பரவல் ஏற்பட்டதாக ரஷ்ய இராணுவம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், ஆளில்லா விமானம் பின்னர் சுட்டு வீழ்த்தப்பட்டதாக ரஷ்யா குறிப்பிடப்பட்டுள்ளது.

சுட்டு வீழ்த்தப்பட்ட ஆளில்லா விமானம் அணுமின் நிலையத்தின் மின்மாற்றியைச் சேதப்படுத்தியுள்ள போதிலும் அணு கதிர்வீச்சு அபாயம் தவிர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச அணுசக்தி நடைமுறைக்கு அமைய அதிகபட்ச கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இருப்பினும், இந்த நடைமுறையை இரண்டு தரப்பினரும் பலமுறை மீறி வருவதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று தாக்குதலை மேற்கொண்ட உக்ரைன் தனது சுதந்திர தினத்தைக் கொண்டாடியது.

கடந்த 1991 ஆம் ஆண்டு சோவியத் ஒன்றியத்திடம் இருந்து உக்ரைன் நேற்றைய தினத்திலேயே சுதந்திரத்தைப் பெற்றது.

இந்த நிலையில், உக்ரைனின் சுதந்திர தினத்தை முன்னிட்டு இங்கிலாந்தின் பிரதான வீதிகளில் உக்ரைன் கொடிகள் பறக்க விடப்பட்டுள்ளன.

உக்ரைனிய மக்களின் சுதந்திரம் மற்றும் ஜனநாயகத்திற்கான இன்றைய நாளில் உக்ரைனுக்கு தனது ஆதரவினை வழங்குவதாக இங்கிலாந்தின் பாதுகாப்பு செயலாளர் ஜோன் ஹீலி தெரிவித்துள்ளார்.

அத்துடன், இங்கிலாந்து இராணுவத்தினர், 2026 ஆம் ஆண்டின் இறுதி வரை உக்ரைனிய இராணுவத்திற்குப் பயிற்சிகளை வழங்குவார்கள் என்றும் அவர் குறிப்பிடப்பட்டுள்ளார்.





# நைஜீரிய வான் தாக்குதலில் 35 ஜிஹாதிகள் உயிரிழப்பு

நைஜீரிய பாதுகாப்புப் படையினரின் தொடர் வான்வழித் தாக்குதல்களில் 35 ஜிஹாதிகள் கொல்லப்பட்டுள்ளனர்.

கேமரூன் எல்லைக்கு அருகே நடந்த வான்வழித் தாக்குதல்களில் இந்த இறப்புகள் நிகழ்ந்தன என வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நைஜீரியா மீது ஜிஹாதிகள் திட்டமிட்ட தாக்குதலைத் தடுக்க இந்த தாக்குதல்கள் நடத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில மாதங்களில் நைஜீரிய பாதுகாப்புப் படையினரின் தாக்குதல்களில் சுமார் 800 போராளிகள் கொல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.







# ஏமன் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல்

இஸ்ரேல், ஏமன் முழுவதும் 30 இற்கும் மேற்பட்ட வான்வழித் தாக்குதல்களை நடத்தி வருவதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

மின் உற்பத்தி நிலையங்கள், ஜனாதிபதி மாளிகை உள்ளிட்ட பகுதிகள் இலக்கு வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த தாக்குதலினால் பரவலான சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.







# இன்றைய ராசி பலன்கள் - 25.08.2025




நீங்கள் இன்று கோவில் விழாக்களில் பங்கு கொள்வீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். மேலும் திருப்தி கிடைக்கும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். இதனை சமாளிக்க திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் தகவல் பரிமாற்றத்தில் பிரச்சினைகள் காணப்படும். இதற்கு உங்களிடம் காணப்படும் அகந்தை போக்கே காரணமாகும்.

இன்று கூடுதல் செலவினங்கள் ஏற்படும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்ய சிறய அளவில் கடன் வாங்குவீர்கள்.

நரம்பு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் பாதிக் கப்படலாம். இதனால் தலைவலி ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்று சுறுசுறுப்புடன் காணப்படுவீர்கள். ஆற்ற வேண்டிய செயல்கள் அதிகமாக இருக்கும். அதிக முயற்சியின்றி உங்கள் இலக்குகளை அடைவீர்கள். பரந்த நோக் குடன் இருப்பீர்கள். புதிய கருத்துகளை கொண்டிருப்பீர்கள். உங்கள் ஆர்வம் அதிகரிக்கும்.

பணியிடத்தில் உங்கள் திறமைகளை நிரூபிப்பீர்கள். குறித்த நேரத்துக்கு முன்பே பணிகளை முடிப்பீர்கள். இதற்கு உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் நேர்மையான அணுகுமுறை கொள்வீர்கள். இதனால் உங்கள் பிரியமானவர் உங்களை நன்கு புரிந்து கொள்வார்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்கும். அதிகமான பணம் சேமிப்பீர்கள்.

உங்களிடம் காணப்படும் ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று மகிழ்சிகரமான நாளாக அமை யாது. வெற்றியை நோக்கி உங்கள் இலக்குகளை அமைத்துக் கொள்வது சிறந்தது. இன்று அதிர்ஷ்டத்தை நம்பா தீர்கள்.

பணியில் யதார்த்தமான அணுகு முறை வெற்றியை அளிக்கும். இதன் மூலம் எளிதில் வெற்றி பெறலாம்.

குடும்ப பிரச்சினை ஒன்றின் காரணமாக உங்கள் துணையுடன் மோதல் ஏற்படும். இதனால் தவறான புரிந்துணர்வு ஏற்படும். இதனை பரஸ்பரம் தீர்த்துக் கொள்ள வேண்டும்.

நிதிநிலைமை திருப்திகரமாக இருக்காது. கூடுதல் செலவினங்கள் ஏற்படும். அது சுமையாக காணப்படும். கவலையை உண்டாக்கும்.




இன்று எதிர்பார்த்த பலன்கள் கிடைக் காது. இன்று உங்கள் அணுகுமுறையில் உறுதி மிகவும் அவசியம்.

பணிச்சூழல் திருப்திகரமாக இருக் காது. இன்று காணப்படும் பணி இறுக்கம் உங்களை கவலைக்குள்ளாக்கும். உங்கள் பணி வழிமுறைகளை திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையுடன் கருத்து வேறுபாடு காணப்படும். வாக்குவாதங்கள் ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

இன்று பண வரவுக்கான சாத்தியம் உள்ளது. பணத்தை கவனமாகவும் சாதுர்யமாகவும் செலவு செய்ய வேண் டும்.

உங்கள் குழந்தைகளின் ஆரோக்கியத்திற்காக செலவு ஏற்படலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று ஆக்கபூர்வமான பலன்கள் கிடைக்காது. இதனால் தன்னம்பிக் கையும் உறுதியும் இழந்து காணப்படு வீர்கள். மாற்றங்களும் பயணங்களும் காணப்படும். இன்று உற்சாகமாக இருக்க வேண்டியது அவசியம்.

உங்கள் பணிகளை முறையாக செய்ய வேண்டும். பணிச்சுமை காரணமாக இன்று பணியில் தவறுகள் நேரலாம்.

பாதுகாப்பற்ற உணர்வின் காரணமாக உங்கள் துணையிடம் தேவையற்ற வார்த்தைகளை பேசு வீர்கள். இதனை தவிர்த்தல் வேண்டும். பக்குவமான அணுகுமுறையோடு அன்பாக பழக வேண்டும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். உங்கள் உடனடித் தேவைகளை சமாளிப்பதை கடினமாக உணர்வீர்கள்.




இன்றைய தினம் சிறப்பாக அமைய நீங்கள் திட்டமிட வேண்டும். எடுக்கும் முடிவுகள் சரியானதாயிருக்க ஒன்றுக்கு இரண்டு முறை யோசிக்க வேண்டும். பெரியவர்களின் ஆலோசனையை கேட்பது நன்று.

பணி நிமித்தமான பயணங்கள் ஏற்படலாம். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் துணையிடம் உங்கள் மன உணர்வுகளை வெளிப்படுத்த முனைவீர்கள். உறவில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த இதனை தவிர்த்தல் நலம்.

இன்று கூடுதல் செலவுகள் ஏற்படக் காண்பீர்கள். இன்று பணம் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைவு.

பற்களில் உபாதைகள் ஏற்படும் என்பதால் அதில் கவனம் செலுத்த வேண்டும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதக மாக அமையும்.புதிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்வீர்கள். இது உங்க ளுக்கு பயனுள்ளதாக இருக்கும். இன்று உங்கள் விருப்பம் நிறைவேறும் நாள்.

உங்கள் சக பணியாளர்கள் ஆதர வாகவும் உதவிகரமாகவும் இருப்பார்கள். புதிய வேலைக் கான வாய்ப்பு உள்ளது. பயணங்கள் ஏற்படலாம்.

உங்கள் சமயோசித புத்தி காரணமாக உங்கள் துணையிடம் நல்லுறவு கொண்டிருப்பீர்கள்.உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

உங்கள் கடின உழைப்பின் மூலமாக ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் வகையில் பண வரவு காணப்படும். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டு கிடைக்கும்.

இன்று சிறந்த ஆரோக்கியம் காணப்படும்.




இன்று பலன்கள் தாமதமாக கிடைக் கும் சூழ்நிலை காணப்படுகின்றது. இன்று அவ்வளவு சிறப்பான நாளாக அமையாது. இன்று எதையும் எதிர் பார்க்காதீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும். உங்கள் பணியாற்றும் முறையை திட்டமிட்டு செயலாற் றுங்கள்.

சமநிலையும் நகைச்சுவை அணுகுமுறையும் உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்ள உதவும்.உங்கள் பிரியமானவரிடம் பேசும் போது கவனமாகப் பேசவும்.

நிதி வளர்ச்சி இன்று மகிழ்ச்சிகரமானதாக காணப் படாது. கூடுதல் செலவினங்கள் ஏற்படலாம்.

உங்கள தாயின் சிறிய உடல் நலப் பிரச்சினை ஒன் றிற்காக பணம் செலவு செய்ய நேரும்.

# இன்றைய ராசி பலன்கள் - 25.08.2025




ஆன்மீக நாட்டம் வளர்ச்சியையும் ஆறுதலையும் தரும். இன்றைய நாளை சிறப்பானதாக ஆக்க புது வழிகள் காண்பீர்கள். அவசர முடிவுகள் எதையும் எடுக்காதீர்கள். அதனால் எந்தப் பயனும் கிடைக்காது.

உங்கள் அன்றாட பணிகளை கவனமுடன் செய்ய வேண்டும். பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையிடம் அகந்தையின்றி பழக வேண்டும். உங்கள் உணர்வுகளை உங்கள் துணையிடம் மனம் திறந்து கூற வேண்டும்.

இன்று நிதியில் ஏற்ற இறக்கங்கள் காணப்படும். இன்று காணப்படும் பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும்.

மன உளைச்சல் மற்றும் கால் வலிக்கான சாத்தியம் உள்ளது.




இன்று ஆன்மீக அணுகுமுறையை நீங்கள் பற்றிக்கொள்வீர்கள். உங்கள் தன்னம்பிக்கையால் சாதனை புரிவீர்கள். இன்று அதிர்ஷ்டத்தை அனுபவிக்கும் நாள். மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று பணிகளை அமைதியாக மேற்கொள்வீர்கள். உங்களின் இந்த அணுகுமுறை உங்களுக்கு வெற்றியை பெற்றுத் தரும்.

உங்களின் அனுசரணையான போக்கு உங்கள் துணையை மகிழ்விக்கும். எனவே இன்றைய நாள் இனிமையாக இருக்கும். உறவில் திருப்தி நிலவும்.

இன்று பண வளர்ச்சி சிறப்பாக காணப்படும். சலுகை அல்லது ஊக்கத்தொகையாக இன்று பணம் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

நீங்கள் சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




இன்று சிறப்பான நாள். இன்று சுறு சுறுப்புடனும் மும்மரமாகவும் காணப் படுவீர்கள். இன்று நற்பலன்கள் கிடைக் கும்.

பணியிடத்தில் புதிய வாய்ப்புகள் உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணியில் நற்பெயர் கிடைக்கும்.

உங்கள் துணையுடன் அமைதி பராமரிப் பீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவில் நல்லிணக்கம் காணப்படும்.

இன்று நிதிவளர்ச்சி சீராக காணப்படும். நீங்கள் கணிசமான தொகை சேமிப்பீர்கள்.

இன்று ஆரோக்கிய பிரச்சினை ஏதும் காணப்படாது. சிறந்த ஆற்றலுடன் காணப்படுவீர்கள்.




நீங்கள் விரும்பும் பலன்கள் கிடைக் கும் அளவிற்கு இன்றைய தினம் சாதக மாக இருக்காது. மனக்குழப்பத்திற்கு ஆளாக நேரலாம். பதட்டப்படாமல் இன்றைய பணிகளை திட்டமிடுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். உங்கள் பணிகளை திட்டமிட வேண்டும். இன்று திட்டமிட்டு பணிகளை மேற்கொள்வது மிகவும் அவசியம்.

இன்று உங்கள் துனையிடம் உணர்ச்சி வசப்படு வீர்கள். இதனால் கருத்து வேறுபாடு ஏற்படும். எனவே நட்பான அணுகுமுறை தேவை.

பயணத்தின் போது பண இழப்புகள் ஏற்படலாம். எனவே பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

இன்று ஆரோக்கியம் குறைந்து காணப்படுவீர்கள்.

# வீட்டின் கூரையில் ஏறிய இளைஞர் கூரை உடைந்து விழுந்ததில் பலி

வீட்டின் கூரையை சரி செய்வதற்காக ஏறிய இளைஞர் ஒருவர் கூரை உடைந்து விழுந்ததில் படுகாயம் உற்ற நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் கோப்பாய் தெற்கு, கோப்பாயைச் சேர்ந்த சந்திரசேகரன் பிரணவன் (வயது 25) என்பவராவார்.

கடந்த 11 ஆம் திகதி மழை பெய்து கொண்டுள்ள போது வீடு ஒழுக்கு ஏற்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து மறுநாள் 12 ஆம் திகதி ஒழுக்கை சீர் செய்வதற்காக வீட்டின் கூரை மீது ஏறிய போது ஊரை உடைந்து விழுந்தது மயக்க முற்ற நிலையில் யாழ். போதனா வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக் கிழமை அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரி ழந்துள்ளார்.

இம்மரணம்தொடர்பில்யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் விசாரணை மேற்கொண்டார். சாட்சி களை கோப்பாய் பொலிஸார் நெறிப் படுத்தினர்.

# பல இடங்களில் மனித உடலால் உணரக்கூடிய வெப்பம் அதிகரிப்பு

நாட்டின் பல பகுதிகளில் மனித உடலினால் உணரக்கூடிய வெப்ப நிலை கவனம் செலுத்தக்கூடிய மட் டத்தில் காணப்படுமென வளிமண்டல வியல் திணைக்களம் எதிர்வுகூறி யுள்ளது.

வடக்கு, வடமத்திய, கிழக்கு ஆகிய மாகாணங்களிலும் மொனராகலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்



களிலும் இந்த நிலைமை காணப் படுமென, வளிமண்டலவியல் திணைக் களத்தின் முன்னறிவிப்பு பிரிவின் பணிப்பாளர் மெரில் மெண்டிஸ் தெரிவித் தார்.

இந்த பகுதிகளில் வெப்பநிலை 39 முதல் 45 செல்சியஸ்/க்கு இடையே பதிவாகும் என எதிர்வுகூறப்பட்டுள் ளது.